தமிழக சட்டப் பேரவை

புதன்கிழமை, 1968 பிப்ரவரி 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

திரு. எம். ஜி. நடேசன் செட்டியார், முன்னாள் உறுப்பினர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தர்மபுரி பொது கிராமப்புற தொகுதிக்காக 1937-லிருந்து 1939-ம் ஆண்டு வரையிலும், பின்னர் 1947-லிருந்து 1952-ம் ஆண்டு வரையிலும் தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினராக இருந்த திரு. எம். ஜி. நடேசன் செட்டியார் அவர்கள் 8—12—1967-ம் தேதி அன்று மறைந்தது குறித்து இந்தச் சபையின் ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் அன்னாரது குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்.)

2. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

கால்நடை உதவி மருத்துவர்களுக்கு சிறப்பு படி

* 20 வினா—திரு. ஏ. எம். ராஜா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செயற்கைக் கருவூட்டும் நிலையங்கள் சிலவற்றிலும், கோழி இன வளர்ச்சி நிலையங்கள் சிலவற்றிலும் பணி புரியும் கால் நடை உதவி மருத்துவர்களில் சிலருக்கு ரூ. 50 கூடுதல் படியாக அல்லது ஊதியமாக வழங்கப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், அத்தகைய நிலையங்களின் பெயர்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) & (இ) கீழ்க் கண்ட செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையங்களில் பொறுப்பு வகிக்கும் கால்நடை உதவி மருத்துவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 சிறப்பு ஈட்டுப்படி வழங்க ஒப்பளிக்கப் பட்டுள்ளது:—

(1) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், விருதுநகர்.

(2) செயற்கைக் கருத்தரிப்பு முறை நிலையம், திண்டுக்கல்.